# Avinashilingam Institute for Home Science and Higher Education for Women

**(Deemed to be University under Category 'A' by MHRD, Estd. u/s 3 of UGC Act 1956)**
**Re-accredited with 'A+' Grade by NAAC. Recognised by UGC Under Section 12B**
**Coimbatore - 641 043, Tamil Nadu, India**


**Master's Degree Examination – June / July 2021**
**II Semester**

**Class: I PG** — **Time : 3 Hours**
**Major: Tamil** — **Max.Marks: 100**

## 20MTMC06 காப்பியம் - மணிமேகலை

**பகுதி – அ** 10x1=10

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மணிமேகலை எந்த சமயத்தைச் சார்ந்த நூல்? CO1K1
   அ) சைவம் ஆ) வைணவம் இ) சமணம் ஈ) பௌத்தம்

2. எந்த முனிவரின் ஆணைப்படி இந்திரவிழா நடைபெற்றது? CO1K1
   அ) வசிட்டர் ஆ) அகத்தியர் இ) கௌசிகர் ஈ) கௌதமர்

3. மணிமேகலையின் தோழி பெயர் என்ன? CO2K1
   அ) சித்திராபதி ஆ) வயந்தமாலை இ) சுதமதி ஈ) தேவந்தி

4. மணிமேகலை மலர் பறிக்கச் சென்ற வனத்தின் பெயர் யாது? CO2K1
   அ) உவவனம் ஆ) சம்பாதி வனம்
   இ) கவேர வனம் ஈ) இலவந்திகைச் சோலை

5. உதயகுமரனின் முற்பிறப்பு பெயர் என்ன? CO3K1
   அ) இராகுலன் ஆ) அத்திபதி
   இ) பிரமதருமன் ஈ) இரவிவன்மன்

6. அமுதசுரபியைக் காவல் செய்தவர் யார்? CO3K1
   அ) சம்பாபதி ஆ) சதுக்கபூதம்
   இ) சாதுசக்கர முனிவர் ஈ) தீவதிலகை

7. 'தீயுங்கொள்ளாத் தீவினையாட்டி' – யார்? CO4K1
   அ) ஆதிரை ஆ) சாலி இ) காயசண்டிகை ஈ) இராசமாதேவி

8. காயசண்டிகை எக்கனியைத் தன் காலால் சிதைத்தாள்? CO4K1
   அ) நெல்லிக்கனி ஆ) மாங்கனி
   இ) நாவற்கனி ஈ) இலந்தைக்கனி

9. போற்றா ஒழுக்கம் புரிந்த தன் இரண்டு மகன்களையும் வாளால் வெட்டியவன் யார்? CO5K1
   அ) காஞ்சனன் ஆ) விருச்சிகன் இ) பூமிசந்திரன் ஈ) ககந்தன்

10. புண்ணியராசனின் அமைச்சன் பெயர் என்ன? CO5K1
    அ) பூமிசந்திரன் ஆ) கஞ்சுகன்
    இ) சனமித்திரன் ஈ) மாசாத்துவன்

## பகுதி – ஆ 5x6=30

**அனைத்து வினாக்களுக்கும் 400 சொற்களுக்கு மிகாமல் அல்லது இரண்டு பக்க அளவில் விடையளிக்க.**

11.அ. நகரை எவ்வாறு அழகுபடுத்த வேண்டுமென முரசறைவோன் கூறினான்? CO1K2

(அல்லது)

11.ஆ. மாதவி கூறிய மூவகைப் பத்தினிப் பெண்டிர் இயல்புகள் யாவை? CO1K2

12.அ. மாதவி, சுதமதி ஆகியோரின் பழம்பிறப்பு குறித்து மணிமேகலா தெய்வம் கூறியவற்றைச் சுட்டுக. CO2K2

(அல்லது)

12.ஆ. பசியின் கொடுமையையும் அதனைப் போக்கும் அறத்தின் மேன்மையையும் பாத்திரம் பெற்ற காதை வழி எடுத்துரைக்க. CO2K2

13.அ. ஆபுத்திரனுக்கும் இந்திரனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை எழுதுக. CO3K2

(அல்லது)

13.ஆ. காயசண்டிகை சாபமுற்ற வரலாற்றைக் குறிப்பிடுக. CO3K2

14.அ. உதயகுமரன் இறந்தமைக்கான காரணமாக கந்திற்பாவை உரைத்தனவற்றை எழுதுக. CO4K3

(அல்லது)

14.ஆ. இராசமாதேவி மணிமேகலைக்கு இழைத்த தீமைகளைப் பட்டியலிடுக. CO4K3

15.அ. சேரன் செங்குட்டுவன் வடவாரிய மன்னரை வென்ற வெற்றி நலத்தைக் குறிப்பிடுக. CO5K3

(அல்லது)

15.ஆ. மணிமேகலை காஞ்சி மாநகரில் அறச்சாலை அமைத்து உயிர்களை உண்பித்த திறத்தைச் சுட்டுக. CO1K3

## பகுதி – இ 5x12=60

**அனைத்து வினாக்களுக்கும் 800 சொற்களுக்கு மிகாமல் அல்லது நான்கு பக்க அளவில் விடையளிக்க.**

16.அ. சுதமதியின் வரலாற்றையும் அவள் உரைத்த வனங்களின் இயல்புகளையும் விளக்குக. CO1K4

(அல்லது)

16.ஆ. சக்கரவாளக் கோட்டம் குறித்து மணிமேகலா தெய்வம் உரைத்தனவற்றை விவரிக்க. CO1K4

17.அ. மணிபல்லவத் தீவில் மணிமேகலை துயருற்றுக் கூறிய மொழிகளைப் புலப்படுத்துக. CO2K4

(அல்லது)

17.ஆ. மணிமேகலையின் முற்பிறப்பு வரலாற்றைப் பீடிகை கண்டு பிறப்புணர்ந்த கதை வழி எடுத்துரைக்க. CO2K4

18.அ. ஆபுத்திரன் வரலாறாக அறவணவடிகள் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக. CO3K4

(அல்லது)

18.ஆ. ஆதிரைபிச்சையிட்ட கதை வழி அறியலாகும் செய்திகளை விவரிக்க. CO3K4

19.அ. காஞ்சனன், உதயகுமரனை வாளால் எறிந்தமையை விளக்குக. CO4K4

(அல்லது)

19.ஆ. சோழ மன்னனிடம் முனிவர்கள் கூறிய செய்திகளை எடுத்துரைக்க. CO4K4

20.அ. மணிபல்லவத் தீவில் தீவதிலகை மொழிந்தவற்றைப் ஆய்ந்துரைக்க. CO5K5

(அல்லது)

20.ஆ. பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை வெளிப்படுத்தும் செய்திகளை ஆராய்க. CO5K5